கேக் தயாரிப்பு பொருள்கள் மற்றும் குளிர்பானத் தயாரிப்புகளைப் பெற்றிட:
கணேஷா
வர்த்தக நிலையம்
65, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் நான்கு
Registered as a Newspaper
# உதயன்
விலை ரூபா 5-00

இனிப்பு, சொக்லட், பிஸ்கட் மற்றும் பழவற்றல்கள் விற்பனையாளர்
கணேஷா
வர்த்தக நிலையம்,
65, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஐப்பசி 28 திங்கட்கிழமை (14 — 11 — 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 355

# சிறிய மாற்றங்களுடன் அதே அமைச்சரவை இன்று காலை 6 மணிக்கு பதவியேற்கும்!

## சோதிடம் பார்த்தும் கோட்டை விட்ட டி. பி.!

கொழும்பு, நவ. 14

பொதுத் தேர்தலை நடத்த வேண்டிய காலத்துக்கு ஆறு மாதங்கள் முன்னதாக அதனை நடத்துவதற்கு தீர்மானிக்க முன், முன்னாள் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க, சோதிடம் பார்த்தார்; தனது கிரகங்களின் நிலைமைகளைத் தெரிந்து கொண்டார்.

ஆனால் தேர்தலில் அவரின் ஐ. தே. கட்சி பதினேழு ஆண்டு காலத்தின் பின்னர் பதவியை இழக்கும் நிலை ஏற்பட்டது.

இதுபோன்ற துரதிர்ஷ்டவசமான பிசகுகள் சோதிடர்களின் வியாபாரத்தை பாதித்து விடவில்லை என்று பி. பி. ஸி. குறிப்பிட்டது.

புதிய அமைச்சரவை சத்தியப்பிரமாணம் செய்வதற்கு சோதிடம் பார்க்கப்பட்டதாகக் கூறப்படுவது குறித்து கருத்து வெளியிடுகையிலேயே பி. பி. ஸி. இவ்வாறு தெரிவித்தது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இரவு ஒன்பது மணிவரை கடைகள் திறந்திருக்கும்

யாழ்ப்பாணம், நவ. 14

பொதுமக்களின் நலன்கருதி சனி, ஞாயிறு மற்றும் பொது விடுமுறை தவிர்ந்த ஏனைய நாட்களில் வர்த்தக நிலையங்களை இரவு 9 மணிவரை திறந்து வியாபாரம் செய்யலாம் என்று யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக விடுக்கப்பட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

''வர்த்தகர்கள் தாம் விரும்பும் பட்சத்தில் தமது வர்த்தக நிலையங்களைச் சனி, ஞாயிறு, பொது விடுமுறை தினங்கள் தவிர்ந்த ஏனைய நாட்களில் இரவு 9-00 மணி வரை பொதுமக்களது நலன் கருதி திறந்து வியாபாரம் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

இந்நேர நீடிப்பானது கடைகளில் வேலை செய்யும் ஊழியர்களது நல உரிமைகளைப் பாதிக்காதவாறு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். ஊழியர்கள் தாமாக விரும்பினால் மட்டுமே, மேல

(4ஆம் பக்கம் பார்க்க)

## இரவு நேர மினிபஸ் சேவை விரைவில் நடத்த ஏற்பாடு

கல்வியங்காடு, நவ. 14

பொதுமக்களின் நன்மை கருதி வர்த்தக நிலையங்களை வியாபாரத்துக்காக இரவு 9 மணிவரை திறப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டிருப்பதை அடுத்து குடாநாட்டில் மினி பஸ் சேவைகளையும் இரவு 9.30 மணிவரை நீடிப்பதற்கு ஆலோசிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொருள்களை வாங்குவதற்காக தூர இடங்களுக்குச் செல்லும் மக்களின் நலன் கருதி பஸ் சேவைகள் நீடிக்கப்படவேண்டும் எனப் பலரும் தெரிவித்திருந்ததை அடுத்தே மினி பஸ் சேவைகளை நீடிப்பது பற்றி ஆலோசிக்கப்படுவதாக அறியவந்தது.

## பரிசுத்த பாப்பரசரை யாழ். அழைத்துவர முயற்சி

யாழ்ப்பாணம், நவ. 14

எதிர்வரும் ஜனவரி மாதம் இலங்கைக்கு விஜயம் செய்யும் பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பரை யாழ்ப்பாணம் அழைத்துவருவதற்கு இயன்றவரையில் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

யாழ். ஆயர் இல்லக்குரு முதல்வர் அருட்திரு எஸ். ஜே. இம்மானுவேல் இத்தகவலைத் தெரிவித்தார்.

ஜனவரி மாதம் கொழும்புக்கு வரும் பரிசுத்த பாப்பரசர் 24 மணி நேரம் அங்கு தங்கியிருக்க ஒழுங்காகி உள்ளது.

அவ்வேளை இரண்டு மணி நேரமாவது பாப்பரசரை யாழ்ப்பாணத்துக்கு வரவழைத்து மக்கள் தரிசித்து ஆசி பெறுவதற்கு உதவுமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும்—

அந்தக் கோரிக்கை நிறைவேற இயன்றவரை முயற்சி எடுக்கப்பட்டு வருவதாகவும் —குருமுதல்வர் மேலும் தெரிவித்தார்.

( 4ஆம் பக்கம் பார்க்க)

## சிலாபம் பகுதியில் ஊரடங்கு உத்தரவு!

கொழும்பு, நவ. 14

சிலாபம் பகுதியில் ஊரடங்குச் சட்டம் கொண்டு வரப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது. ஆனால் அதற்கான காரணம் தெரியவரவில்லை.

குளியாப்பிட்டி, சிலாபம் ஆகிய பொலீஸ் அத்தியட்சகர் பிரிவுகளிலும் —

பன்னில, வத்தேகம, பேருவளை பொலீஸ் பிரிவுகளிலும் —

( 4ஆம் பக்கம் பார்க்க)

## புதிய ஜனாதிபதி சந்திரிகாவின் முன்னிலையில் சத்தியப்பிரமாணம்

கொழும்பு, நவம்பர் 14

ஸ்ரீலங்காவின் புதிய அமைச்சரவை இன்று காலை 6 மணிக்கு - சுபநேரத்தில் - ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க முன்னிலையில் பதவியேற்கும்.

சந்திரிகா பிரதமராகப் பதவி வகித்த போது இருந்த அதே அமைச்சரவையே - சிறிய மாற்றங்களுடன் - இன்று பதவியேற்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

அமைச்சரவையில் பெரிய மாற்றங்கள் ஏதும் இருக்காது என செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

அமைச்சர்களின் பதவிப் பிரமாண வைபவம் நேற்று நடைபெறவிருந்தது.

ஆனால் நேற்று மங்களகரமான முகூர்த்தம் இல்லை என்றும் —

இன்று காலை 6 மணிக்கு

(4ஆம் பக்கம் பார்க்க)

## மாவீரர் எழுச்சி வாரம் நாளை முதல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ. 14

மாவீரர் நாளை முன்னிட்டு மாவீரர் எழுச்சிவார நிகழ்வுகள் நாளை செவ்வாய்க்கிழமைமுதல் எதிர்வரும் 20 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளன.

தமிழீழ மக்களின் விடிவுக்காக வீரச்சாவடைந்த மாவீரர்களை நினைவுகூர்ந்து எழுச்சி கொள்ளும் மாவீரர் நாள் எதிர்வரும் 27 ஆம்திகதி கொண்டாடப்படவுள்ளது.

அதற்கான ஏற்பாடுகளை ஒருங்கமைத்து முன்னெடுக்கும் வகையில் நாளைமுதல் தொடர்ந்து 6 நாட்கள் மாவீரர் எழுச்சி வாரமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

மாவீரர் எழுச்சி வாரத்தில் குடாநாட்டில் வட்டவை ரீதியாக பல்வேறு நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

வீதிகள், ஒழுங்கைகள் மற்றும் வீட்டு சுற்றாடல்கள் தூய்மைப்படுத்தப்படும். புதிதாகப் புனரமைப்பு வேலைகளும் நடைபெறும்.

மாவீரர்களின் நினைவுத் தூபிகள், உருவப்பட அமைப்புகள் என்பன சிரமதானப் பணிகள் மூலம் பொலிவுறச் செய்யப்படும்.

வீதிகள் மற்றும் பொது இடங்களில் போராட்ட வரலாறுடன் தொடர்புடைய அலங்கார வளைவுகள்

(4ஆம் பக்கம் பார்க்க)

### மலையக மக்களின் பிரச்சினைகள் தொடர்பான

## இ.தொ.காவின் ஆறு அம்சத் திட்டம்: விரைவில் பொ.ஐ.மு.அரசுடன் பேச்சு

### தொண்டமான் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 14

மலையக மக்களின் பிரச்சினை தொடர்பாக ஆறு அம்சத் திட்டம் ஒன்றை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் முன்வைத்தது. அந்த ஆறு அம்சத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசின் உறுதிமொழியையும் இ. தொ. கா. பெற்றுக் கொண்டது.

அந்த விடயம் குறித்து அரசுடன் இ. தொ. கா. விரைவில் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கவுள்ளது.

இ. தொ. கா. தலைவர் எஸ். தொண்டமான் இத்தகவலை வெளியிட்டார்,

ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா குமாரதுங்க பெரு வெற்றியீட்டியதை அடுத்து பத்திரிகைகளுக்கு வெளியிட்ட அறிக்கையிலேயே அவர் இத்தகவலை வெளியிட்டார். (உ-3)

## அரசு - புலிகள் பேச்சை ஐ.தே.க. குழப்பவோ தடுக்கவோ முனையாது

### கட்சியின் புதிய தலைவர் ரணில் அறிவிப்பு

கொழும்பு, நவ. 14

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அரசு மீண்டும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு விரும்புவதானால், அவ்வாறே செய்யட்டும். அதனை நாம் குழப்பவோ அல்லது தடுக்கவோ முனையமாட்டோம்.

— இவ்வாறு தெரிவித்திருக்கிறார் எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய தலைவருமான திரு. ரணில் விக்கிரமசிங்கா.

பி. பி. ஸியின் கொழும்புச் செய்தியாளர் ஜோர்ஜ் ஆளிக்கு வழங்கிய பேட்டி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாண ஆஸ்பத்திரிகளுக்கு ஆசிய நாடுகளிலிருந்து டாக்டர்கள்

### அழைத்து வர முயற்சி

கொழும்பு, நவ. 14

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள அரசு மருத்துவமனைகளில் டாக்டர்களுக்கு ஏற்பட்டுள்ள பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாக பாகிஸ்தான் மற்றும் சில ஆசிய நாடுகளிலிருந்து வைத்திய நிபுணர்களைத் தருவிப்பதற்கு சுகாதாரம் மற்றும் சமூகசேவைகள் அமைச்சர் ஏ. எச். எம். பௌஸி நடவடிக்கை எடுத்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த நாடுகளின் அரசாங்கங்களுக்கு தாம் கடிதமூலம் வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் —

காலக்கிரமத்தில் இந்த நாடுகள் தமது வேண்டுகோளுக்கு சாதகமான பதில் அனுப்பும் என்று தாம் நம்பியிருப்பதாகவும் —

அமைச்சர் பௌஸி 'சண்டே லீடர்' பத்திரிகைக்குத் தெரிவித்தார்.

இதேவேளை —

யாழ்ப்பாணம் சென்று

(4ஆம் பக்கம் பார்க்க)

## அலரி மாளிகையிலேயே பதவியேற்பு வைபவம்

புதிய அமைச்சரவை பதவியேற்கும் வைபவம் இன்று காலை கொழும்பில் அலரி மாளிகையிலேயே இடம்பெறவுள்ளது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறை ஏற்படுத்தப்பட்ட பின்னர் இடம்பெற்ற பிரதமர் மற்றும் அமைச்சர்களின் பதவியேற்பு வைபவங்கள் ஜனாதிபதி மாளிகையிலேயே ஜனாதிபதி முன்னிலையில் நடைபெற்று வந்தன.

ஆனால் இம்முறை அலரி மாளிகையில் ஜனாதிபதி சந்திரிகா பிரதமருக்கும் மற்றும் அமைச்சர்களுக்கும் பதவிப் பிரமாணம் செய்யவுள்ளமை குறிப்பிடத்தக்கது. [ஐ]

## ஜனாதிபதித் தேர்தல் நியாயமாக நடந்தது!

### சர்வதேச அவதானிகள் தகவல்

கொழும்பு, நவ. 14

யாழ். மாவட்டத்தில் ஒரு சில குறைபாடுகள் நிலவிய போதிலும், நாட்டின் ஏனைய பகுதிகள் அனைத்திலும் ஜனாதிபதித் தேர்தல் சுதந்திரமானதாகவும் நேர்மையானதாகவும் நடத்தப்பட்டுள்ளது.

சர்வதேச அவதானிகள் இவ்வாறு தெரிவித்தனர்.

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல் பற்றிய தங்களின் அவதானிப்புகளை சர்வதேச அவதானிகள் குழுத் தலைவர் எரிக் கொன்ஸல்வேஸ் நேற்று செய்தியாளர் மாநாடு ஒன்றில் வெளியிட்டார்.

'சார்க்' அமைப்பு நாடுகளைச் சேர்ந்த 18 பிரதிநிதிகளும் சர்வதேச நியாயவாதிகள் ஆணைக்குழுவைச்

(4ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் பெரும் மழை! உதவும் பணியில் ஹெலிகள்

கொழும்பு, நவ. 14

கிழக்கில் தொடர்ந்துபெய்து வரும் பெருமழை மற்றும் கடும் காற்று ஆகியவற்றினால் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் பெரும் பாதிப்பு ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 30 ஆயிரம் குடும்பங்கள் வீடுவாசல்களை இழந்திருப்பதாகவும் —

பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவும் பணியில் ஹெலிக்கொப்டர்களும் கடற்படை படகுகளும் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் நெதர்லாந்து வானொலி தெரிவித்தது.

மட்டக்களப்பு கரையோரப் பகுதி பெரும் சேதத்துக்கு உள்ளாகியிருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் இன்றும் தொடர்ந்து மழை பெய்யும் என கொழும்பில் வானிலை அவதான நிலைய வட்டாரங்கள் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.'

(மற்றோர் செய்தி 3 ஆம் பக்கத்தில்) (உ-3)

### முச்சந்தி முரளி



இருப்பியும் ஆறு அம்சம் எண்டுறார்... அப்ப அமைச்சர் பதவி அவுட்டோ....?

## சந்திரிகா இந்தியா செல்வார்!

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விரைவில் இந்தியா செல்லவிருக்கிறார்.

ஜனாதிபதி சந்திரிகாவே இத்தகவலை சூசகமாக வெளியிட்டதாக ''வெரித்தாஸ்'' வானொலி தகவல் வெளியிட்டது. (உ-3)

## 4 ஆயிரம் கார்களுடன் சேர்ந்து எரியும் கப்பல்!

கொழும்பு, நவ. 14

காலிக் கரைக்கு அப்பால் இன்னமும் எரிந்து கொண்டிருக்கும் ''மொங்கோலியா'' என்ற சரக்குக்கப்பலில் சுமார் 4 ஆயிரம் புத்தம் புதிய மோட்டார் கார்கள் சிக்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜப்பானில் இருந்து இக்கார்களை ஏற்றிக் கொண்டு குவைத் நாட்டுக்குச் சென்று கொண்டிருந்தபோதே காலிக் கரைக்கப்பால் தென் பகுதிக் கடலில் இக்கப்பலில் தீப்பிடித்துக் கொண்டது.

இப்போது இந்தக்கப்பல் காலித்துறை முகத்தில் இருந்து 50 மைல்களுக்கு அப்பால் தள்ளப்பட்டுள்ளதாகவும் —

தீயை அணைப்பதற்கு ஏனைய கப்பல்களின் உதவி நாடப்பட்டுள்ளதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்


## விற்பனைக்கு

பொமனேரியன் நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: றோசாத்தோட்டம், தலங்காவற் பிள்ளையார் கோயிலடி, திருநெல்வேலி கிழக்கு. [33754]

## தேவை

படம் பிறேம் செய்வதில் அனுபவம் உள்ளவர்களும், விற்பனை உதவியாளர்களும் தேவை. நேரில் தொடர்பு: யாழ். நுகர்வோர் காட்சியகம், இல. 441, கே. கே. எஸ். வீதி, சிவன் வடக்கு வீதிச் சந்தி, யாழ்ப்பாணம். (33741)

பெண்களுக்கான உடைகள் வெட்டித் தைக்கும் அனுபவம் நிறைந்த பெண் தேவை. தொடர்பு: றோசுகி ரெயிலறிங், பருத்தித்துறை வீதி, திலீபன் தூபி அருகில், நல்லூர். [33752]

தமிழ், ஆங்கிலம் தட்டச்சு வேலையும் அத்துடன் றோணியோ செய்யக்கூடிய பெண் பிள்ளைகள் உடனடியாகத் தேவை. தொடர்பு: திருமால் அச்சகம், 393, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். [33750]

## ஆண்டு - 4

ஆண்டு 4ற்கு புலமைப்பரிசில் (1995) மாதிரி வினாத்தாள்கள் (13-11-94) ஞாயிறு வெளியிடப்படும். புலமைப் பரிசில் பயிற்சி 24, தமிழ் கட்டுரைகள் 14, ஆங்கிலக் கட்டுரைகள் விடைகளுடன் வெளிவந்துள்ளன! புத்தக சாலைகளிலும் எம்மிடமும் பெற்றுக் கொள்ளலாம், புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (33743)

## மணமகள் தேவை

துலாம் இலக்கின உதயச் செவ்வாய், கார்த்திகை 4ஆம் பாதம், 1967இல் பிறந்தவர், இந்து சமயம், பிரான்ஸில் பிரஜா உரிமையுடன் சொந்த தொழில்புரிபவர். இவருக்கு பொருத்தமான பெண்ணின் சாதகத்துடன் விவரங்களுக்கு நேரில் தொடர்பு கொள்ளவும்: வே. செல்லத்துரை (இளைப்பாறிய ஆசிரியர்), கோப்பாய் வடக்கு. [8013]

## விசேஷ கழிவு

இலகு தோசை மா, இட்லி மா, அப்பம் மா ஆகியவற்றை எம்மிடம் மொத்தமாகக் கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் முன்கூட்டியே ஒழுங்குசெய்து விசேஷ கழிவைப் பெற்றுக்கொள்ளுங்கள். தொடர்பு: சகல அண்ணா தொழிலக கிளைகளிலும். (சி-9597)

## றேடியோக்கள் திருத்துதல்

சகல கசட்றேடியோக்கள், T. V., டெக், கார் கசற்றுக்கள் மற்றும் ஒட்டோமற்றிக் எலெக்ரொனிக் மேசை, சுவர், கைக்கடிகாரங்களை சிறந்த முறையில் திருத்திக் கொள்ள டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ், 286, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் (வானவில் அருகில்), கிளை: கண்டி றோட், சாவகச்சேரி. மானிப்பாய், ஆனைக்கோட்டை. (சி-9616)

## சேவை

குறைந்தசெலவில் நிறைந்த சேவை ரைப்பிங், றோணியோ வேலை அழகிய முறையில் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: திருமால் அச்சகம், 393, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். [33749]

## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
# விஷேட அறிவித்தல்

11-11-94 ஆம் திகதிய பொதுநிர்வாக சபை முடிவுக்கு அமைய கூட்டங்களுக்கு வருகை தராதவர்கள் ஆகக் குறைந்தது ஒருவார காலம் நிறுவனம் நடத்துவதற்கு தடைசெய்யப்படுவர் என்பதை அறியத்தருகின்றோம்.

சகல கோட்ட தலைவர்களும் இம்மாதம் 16ஆம் திகதி நடைபெறவுள்ள தங்கள் கோட்ட பொதுக் கூட்டத்திற்கு வருகை தராதவர்களின் விவரங்களை உடனடியாக எமது மாவட்ட பணிமனையில் ஒப்படைக்கவும்.

பொதுச் செயலாளர்
யாழ். மாவட்டம்

(சி-9669)

## அறிவியல் சிந்தனை அலைகள்

உள்ளூராட்சித்திணைக்கள தமிழின்ப இலக்கியப் போட்டியில் சிறந்த அறிவியல் நூலுக்கான பரிசு பெற்ற

பா. தனபாலனின்
"அறிவியல் சிந்தனை அலைகள்"
நூல் விற்பனையாகிறது.

★ மொத்தமாகப் பெறுவோருக்கு விசேட கழிவுகள் உண்டு.

பூபாலசிங்கம் புத்தகசாலை
யாழ்ப்பாணம்

(33761)


## 91ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

| | அவனியில் அவதரிப்பு: |
|---|---|
| தே. செல்வமணி | 14-01-1948 |
| தே. சுபாஸ்ரீ | 16-02-1965 |
| தே. சிறீஸ்காந்தராசா | 19-07-1976 |

அநியாய அழிப்பு: **16-08-1994**

கண்ணின் மணிகளாய் காத்து வந்தென்
புண்ணிய மின்றிப் பறிகொடுத்தோம்
விண்ணில் விரைந்த மாற்றார் எறிகணை
மண்ணில் உம் வாழ்வை பறித்த தையோ.

இன்று 14 - 11 - 1994 நடைபெறும் அந்தியேட்டி கிரியைகளிலும் நினைவஞ்சலிப் பிரார்த்தனையிலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

இவர்கள் பிரிவால் துயருறும்:
- குடும்பத்தினர்.

பாரதி வீதி,
அச்சுவேலி.

[33753]

மக்கள் பாவனைக்கு உதவாத நிலையில்

# 20 தொன் தேயிலை தேங்கிக் கிடக்கிறது

யாழ்ப்பாணம், நவ. 14

யாழ். மாவட்ட மக்களுக்கு விநியோகிப்பதற்கென அரச அதிகாரிகளின் ஏற்பாட்டில் கப்பல் மூலம் அனுப்பப்பட்ட இருபது மெற்றிக் தொன் தேயிலை மக்கள் பாவனைக்கு உதவாத நிலையில் யாழ். உணவுக் களஞ்சியத்தில் தேங்கிக் கிடப்பதாகத் தெரிய வருகிறது.

கொழும்பில் உள்ள தனியார் கம்பனி ஒன்று யாழ் மாவட்டத்துக்கு அவசர தேவைக்கென கப்பல் மூலம் 72 ஆயிரம் கிலோ தேயிலையை அனுப்பியிருந்தது.

இந்த தேயிலையில் நல்ல நிலையில் இருந்த தேயிலை மக்களுக்கு விற்கப்பட்டதாகவும்—

தற்சமயம் 20 ஆயிரம் கிலோ தேயிலை தேங்கிக் கிடப்பதாகவும் — தெரிய வந்தது

மரத்தூள் போன்று காணப்படும் இந்தத் தேயிலையை பரிசோதனை செய்த சுகாதாரப் பரிசோதகர்கள் அது பாவனைக்கு உதவாதது என்று ஆலோசனை கூறியுள்ளனர் எனத் தெரியவருகிறது.

ஒரு கிலோ தேயிலை 74 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்பட்டு 85 ரூபாவுக்கு இங்கு விற்கப்பட்டதாகவும் தெரியவந்தது.

தற்போது தேங்கிக்கிடக்கும் தேயிலையின் பெறுமதி சுமார் 15 லட்சம் ரூபா எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

யாழ். உணவுக்களஞ்சியத்தில் தேங்கிக்கிடக்கும் இந்த தேயிலை மக்கள் பாவனைக்கு உதவாதது என்று கூறப்பட்டுள்ளதால், அரச அதிகாரிகளின் செயற்பாட்டால் மக்களின் பணம் வீணாகக்கிடப்பதாக மக்கள் கவலை தெரிவித்தனர். (உ-3)

## வன்செயல்கள் குறைந்த ஜனாதிபதித் தேர்தல்

கொழும்பு, நவ. 14

கடந்த ஓகஸ்டில் நடத்தப்பட்ட பொதுத் தேர்தலுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் இவ்வாரம் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது குறைவான வன்செயல்களே இடம்பெற்றன.

பொலீஸ் வட்டாரங்கள் இவ்வாறு தெரிவித்தன.

பொதுத் தேர்தலின்போது சுமார் 2 ஆயிரத்து 500 சம்பவங்கள் அறிவிக்கப் பட்டிருந்தன.

ஆனால் ஜனாதிபதித் தேர்தலின்போது இடம்பெற்ற வன்செயல்களின் எண்ணிக்கை ஆயிரத்து 768 மட்டுமே என்று தெரிவிக்கப்படுகிறது.

இவைகளில் 20 சம்பவங்கள் மட்டுமே பாரதூரமானவை என்று கணிக்கப்பட்டுள்ளன இவற்றில் கிராண்ட்பாஸ் குண்டு வெடிப்புச் சம்பவமும், பன்னலைக் குண்டுவெடிப்பும் அடங்குகின்றன. இவ்விரு சம்பவங்களிலும் 56 பேர் கொல்லப்பட்டனர். (இ-எ-6)

## சுதந்திரக் கட்சியின் பாதையை மாற்றியவர்

### சந்திரிகாவுக்கு பாராட்டு

கொழும்பு, நவ. 14

சுதந்திரக்கட்சியின் பாதையை சந்திரிகா மாற்றிவிட்டார்.

பிரபல சட்டத்தரணி ஹேமந்த வர்ணகுலசூரியா முன்கண்டவாறு தெரிவித்தார்.

1956 இல் இந்த நாட்டில் மறைந்த பிரதமர் பண்டாரநாயக்கதான் இனவாதத்தை ஏற்படுத்தினார் என்றுகருத்து நிலவுகிறது. அதனை இன்று அவரின் புதல்வி சந்திரிகா மாற்றிவிட்டார்.

அரசியலில் இருந்து இனவாதத்தை அவர் பூரணமாக அகற்றிவிட்டார்.

இதன் பின்னர் எந்தக்கட்சியாகினும் சரி அரசியலில் இனவாதத்தை முன்னெடுத்துச் செல்லவியலாது.

— இவ்வாறு அவர் கூறினார். (எ-6)

## உள வளர்ச்சியுடன் கூடிய போசாக்கே அவசியம்

சாவகச்சேரி, நவ. 14

போசாக்கு என்பது வெறுமனே உணவில் மட்டும் தங்கியிருக்கவில்லை. அது அறிவு, ஆற்றலுடன் கலந்து, வாழ்வுடன் பின்னிப் பிணைந்து நிற்கின்றது.

யாழ். செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் திரு. சுவாமிநாதன்முன்கண்டவாறு தெரிவித்தார்.

சாவகச்சேரி நகரசபை பொது மண்டபத்தில் நடந்த தாய்மார்களுக்கான கருத்தரங்கில் அவர் பேசுகையில் முன்கண்ட கருத்தை வெளியிட்டார்.

உணவின் தேடலில் குழந்தை தாய் நோக்க, தாய் கணவனை நோக்கும் நிலை நிலவுகின்றது. இயற்கையின் அனுசரணையுடன் தொழில்நுட்ப அறிவுகளைப் பேணி எமது வளங்களைப் பயன்படுத்தி ஒவ்வொருவரும் வாழப்பழக வேண்டும் என்றும் அவர் கூறினார்.

பிரிவுத் திட்டமிடல் பணிப்பாளர் திரு. நல்லையா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மாவட்டவைத்திய அதிகாரி திரு. எஸ். சிவபாதம் சித்த வைத்திய அதிகாரி திருமதி ச. இந்திரா, சாவகச்சேரி நகரசபைச் செயலாளர் திரு. சி. நடராசா ஆகியோரும் பேசினர்.

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், நவ. 14

யாழ். மாவட்ட பாடசாலைகள் விளையாட்டு அபிவிருத்திக் குழு நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 2.00 மணி முதல் நடைபெறும்— 19 வயதுப் பிரிவினருக்கான — உதைபந்தாட்டப் போட்டிகளில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில்

★ உரும்பிராய் இந்து எதிர் மானிப்பாய் இந்து.

★ புத்தூர் சோமஸ்கந்தா எதிர் கனகரத்தினம் ம.ம.வி.

★ வரணி ம. வி. எதிர் வட்டு இந்து

யாழ். பல்கலை. மைதானத்தில்

★ புங்குடுதீவு ம. வி. எதிர் யாழ். இந்து

★ ஸ்கந்தா எதிர் விக்னேஸ்வரா

★ சாவகச்சேரி இந்து எதிர் யாழ் மத்திய கல்லூரி

## முதன்மை தேர்வாளர் கூட்டம்

யாழ்ப்பாணம், நவ. 14

முதனிலை, இளநிலை தேர்வுகளின் மதிப்பீட்டு நிலையங்களில் முதன்மைத் தேர்வாளர்களாகக் கடமை புரிவதற்கென கோட்டப் பிரதிக் கல்விப்பணிப்பாளர்களால் தெரிவு செய்யப்பட்டோருக்கான கூட்டம் எதிர்வரும் வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நல்லூர் சாதனா பாடசாலையில் நடைபெறவுள்ளது.

# சமூக முன்னேற்றத்துக்கு உழைக்கும் பெரும்பொறுப்பு வங்கிகளுக்கு உண்டு

### முன்னாள் மாவட்ட முகாமையாளர் வலியுறுத்து

சமூகத்தின் முன்னேற்றத்துக்கும் நாட்டின் வளர்ச்சிக்கும் உழைக்க வேண்டிய பெரும் பொறுப்பு வங்கிகளுக்கு உண்டு. தமிழ்ப் பகுதிகளைப் பொறுத்தளவில் இங்குள்ள மூலவளங்களைக் கொண்டு பொருளாதார வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்லும் விதத்தில் வங்கிகள் செயற்பட வேண்டும். அந்த வழி நோக்கிச் செயற்படுவதில் வங்கி அதிகாரிகள் முன்னோடிகளாகத் திகழ வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் இலங்கை வங்கியின் முன்னாள் யாழ். மாவட்ட முகாமையாளர் திரு. கே. கணேசமூர்த்தி.

திரு. கணேசமூர்த்தி முப்பதெட்டு வருட வங்கிச் சேவையில் இருந்து கடந்த மாதம் ஓய்வு பெற்றார். அதனை ஒட்டி யாழ். மாவட்டத்தில் உள்ள இலங்கை வங்கிக் கிளைகளைச் சேர்ந்த பணியாளர்கள் அவரது சேவையைப் பாராட்டி பெரிய அளவிலான பிரிவுபசார வைபவம் ஒன்றை நடத்தினர்.

யாழ் மத்திய கல்லூரி மண்டபத்தில் [illegible] 23 ஆம் திகதி [illegible] பிரிவுபசார [illegible] அளிக்கப்பட்ட பிரிவுபசார விழாவில் பதிலுரை வழங்குகையிலேயே திரு கணேசமூர்த்தி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தமது பதிலுரையில் மேலும் தெரிவித்ததாவது.

வங்கிகள் முதலுக்கு வட்டி வழங்கும் நிலையங்களாக இருந்த காலம் மாறிவிட்டது. அவை இப்போது நாட்டின் அபிவிருத்திக்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் உழைக்கும் தூண்டு சக்திகளாகச் செயற்படுகின்றன.

எமது பகுதியின் அபிவிருத்திக்கும், மக்களின் வாழ்க்கை நிலை முன்னேற்றத்துக்கும் இங்குள்ள வங்கிகள் உழைக்க வேண்டும். அந்த வழி நோக்கிச் செயற்படுவதில் இங்கே பணிபுரியும் அதிகாரிகளே அதிக அக்கறை காட்ட வேண்டும். கொழும்பில் உள்ள மேலதிகாரிகளுக்கு இடித்துரைத்து எமது பகுதி மக்களின் மேம்பாட்டுக்கு உழைக்கப் பின்னிற்கக்கூடாது.

யாழ்ப்பாணத்தில் மக்கள் படும் கஷ்டங்களை நாம் கொழும்புக்குச்சென்று கூறிய போது ஆச்சரியத்துடன் கேட்டு, நம்பியும் நம்பாமலும் இருந்தவர்கள் பலர். [illegible] போது உண்மையைத் தெரிந்து கொண்டிருப்பார்கள்.

எங்கள் பகுதியில் கல்வி நிலை பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதனை இப்போதே சீர்செய்யாவிடில் எமது கல்விச் செல்வம் அழிந்து விடும். இப்போதுள்ள கல்வி முறையில் பெரும் மாற்றம் தேவை. தொழிற் கல்விக்கு முன்னுரிமை வழங்கும் புதிய கல்வித்திட்டம் அறிமுகப்படுத்தப்பட வேண்டும் — என்று அவர் கூறினார்.

மிகவும் நெருக்கடியான, கஷ்டங்கள் நிறைந்த காலப் பகுதியில் யாழ். மாவட்டத்தில் பணிபுரிந்த போதிலும், திரு. கணேசமூர்த்தி மக்கள் நலனுக்காகவும், வங்கி ஊழியர்களின் நலனுக்காகவும் மேற்கொண்ட நடவடிக்கைகளைக் குறிப்பிட்டு பலரும் அவரது சேவை மனப்பான்மை, துணிச்சல், தலைமைத்துவம், ஆகிய பண்புகளைப் பாராட்டிப் பேசினர்.

இப்போதைய மாவட்ட முகாமையாளர் திரு எஸ். சண்முகசுந்தரம் உட்பட கிளை முகாமையாளர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் ஆகிய பல தரப்பினரும் பாராட்டுரைகள் வழங்கினர். (அ)

## சிறிமா வேட்பாளரானது தோல்விக்கு காரணம்

### ஐ. தே. கவின் எம்.பி. கூறுகிறார்

ஜனாதிபதி வேட்பாளராக சிறிமா திஸாநாயக்கா திடீரென நியமிக்கப்பட்டது ஐ. தே. கவினரிடையே குழப்ப நிலையை ஏற்படுத்தியது என்றும் தமது கட்சி தேர்தலில் தோல்வியை சந்திக்க இதுவே காரணம் என்றும் ஐ. தே. க எம். பியான சரத் அமுனுகம தெரிவித்தார்.

ஐ. தே கட்சி ஆதரவாளர்கள் பலர் தமது பாதுகாப்புக் குறித்த அச்சத்தின் காரணமாக இம்முறை வாக்களிக்கச் செல்லவில்லை என்றும் அவர் கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சி முன்னரும் தோல்விகளைச் சந்தித்துள்ளது. ஆயினும் பின்னர் புனரமைக்கப்பட்டது. கட்சியின் புதிய தலைவராகப் பொறுப்பேற்றுள்ள ரணில் விக்கிரமசிங்கா கட்சியை மீண்டும் முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்வார் என்றும் சரத் அமுனுகம மேலும் தெரிவித்தார். (ஐ-6)

# மணல் பிரதேசத்தில் மரக்கறி பயிர்ச்செய்கை

மணல் காட்டில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன சூழல் பாதுகாப்பு நிறுவனத்தால் பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்ட மரக்கறி பயிர்ச் செய்கை வெற்றி அளித்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இப் பிரதேசத்தில் பயிரிடப்பட்ட மரக்கறிப் பயிர்களான வெண்டி, கத்தரி, கீரை, பாகல், டுபாய் பூசனி, புசிற்றாவோ ஆகிய பயிர்கள் செழிப்பாக வளர்ந்துள்ளன.

இதுவரை எவ்வித பயிர்களும் உண்டு பண்ணப்படாத நிலத்தில் இப் பயிர்ச் செய்கை வெற்றி அளித்துள்ளதுடன் நிரந்தரப் பயிர்களான எலுமிச்சை, லாவுலு, கொடித்தோடை ஆகிய மரங்களும் பரீட்சார்த்தமாக நடுகை செய்யப்பட்டு வெற்றியளித்துள்ளன.

மேலும் இக்கால போகமழையுடன் பல்வேறு வகையான பயிர்கள் பயிரிட உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் சூழல் பாதுகாப்பு நிறுவனம் செய்தி குறிப்பொன்றின் மூலம் தெரிவித்துள்ளது. (எ)

ஐ.தே.க. காலத்தில் காணாமற்போன

## மலையக இளைஞர்களை கண்டுபிடிக்க வேண்டுகோள்

கொழும்பு, நவ. 14

ஐ. தே. க. அரசு பதவியில் இருந்த காலத்தில் காணாமற்போன மலையகத் தமிழ் இளைஞர்களுக்கு என்ன நடந்தது என்பதைக் கண்டு பிடிக்கும்படி மலையக அமைப்புகள் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளன.

தென்பகுதியில் 1989-90 காலப்பகுதியில் கடத்தப்பட்டு, காணாமற் போனவர்களைக் கண்டு பிடிக்கும் முயற்சியாக புதைகுழிகள் தோண்டப்படுவதை வரவேற்றுள்ள இந்த மலையக அமைப்புகள், காணாமற்போன மலையக தமிழ் இளைஞர் நிலைபற்றியும் அரசு விசாரணை நடத்த வேண்டும் என்றும் கோரியுள்ளன.

அங்கவீனமுற்ற

## அரச படையினருக்கு பஸ்களில் தனி ஆசனம்

கொழும்பு, நவ. 14

யுத்தத்தில் அங்கவீனமான படையினருக்கு அரச பஸ்களில் தனி ஆசனங்கள் ஒதுக்கும்படி போக்குவரத்து அமைச்சர் ஸ்ரீமனி அத்துலத்முதலி உத்தரவிட்டுள்ளார்.

இப்போது அரச பஸ்களில் பெண்கள் மதகுருமார்கள் ஆகியோருக்கே தனி ஆசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

அமைச்சரின் உத்தரவை அடுத்து அங்கவீனமடைந்த படையினருக்கும் அரச பஸ்களில் தனி ஆசனங்கள் ஒதுக்கப்படும் என்று போக்குவரத்து அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## ஆண்டிறுதிப் பரீட்சைகள் பாடசாலை மட்டத்தில்

அச்சுவேலி, நவ. 11

ஆண்டிறுதிப் பரீட்சை மூலம் மாணவர்களை வகுப்பேற்றும் விடயத்தில் இம்முறை புதிய நடைமுறை பின்பற்றப்படும்.

குறிப்பிட்ட சில பிரதான பாடங்களில் சித்தி பெறாத மாணவர்கள் வகுப்பேற்றப்படமாட்டார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

இம்முறை ஆண்டிறுதிப் பரீட்சைகள் பாடசாலை மட்டத்திலேயே நடைபெறும் கடந்த ஆண்டில் நடைபெற்றது போன்று கோட்ட மட்டத்தில் பொதுப் பரீட்சையாக அது இம்முறை நடைபெற மாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-11)

## உலர் உணவு நிவாரணம்

காரை நகர் ப. நோ. கூ. சங்கத்தைச் சேர்ந்த குடும்பங்கள் செப்டெம்பர் முதல் இரு வாரங்களுக்குமான தமது உலர் உணவுப் பொருள்களை எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன் பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# மருத்துவ மன்ற பணி மக்களுக்கு பயனுள்ளது

### 'மருத்துவ இதழ்' வெளியீட்டில் உரை

இன்றைய நெருக்கடியான நிலைமையில் மருத்துவர்களும், மருத்துவசேவையாளர்களும் இயன்றவரை குறைவின்றி தமது சேவையைச் சமூகத்துக்கு ஆற்றிவருகின்றனர். மருத்துவம் தொடர்பான மன்றங்களின் பணியும் மக்களுக்குப் பயன் அளிப்பவையாக உள்ளன.

கடந்த மாதம் 23 ஆம் திகதி யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெற்ற வட பிராந்திய யாழ். ஆங்கில மருந்து வணிகர் மன்றத்தினரின் "மருத்துவ இதழ்" வெளியீட்டு விழாவின்போது உரை நிகழ்த்திய யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. சி. இளம்பரிதி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

மருத்துவரீதியில் மக்களுக்கு மருந்தைத் தெரிந்து கொடுக்க, மருந்து மாறாதிருக்க மருந்து வணிகர் சங்கத்தின் முயற்சியும் கைகொடுத்துள்ளது. மருந்து வணிகர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் மருந்தாளர் பயிற்சி மிகப் பயன் அளித்துள்ளது. மருத்துவ நூல் வெளியீடுகளும் மக்களுக்குப் பயனுடையவையே என்றார் அவர். (க-15)

## தமிழீழ வளத்தின் தனித்துவக் குறியீடு பனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

292/2 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## பயணத்தை தொடங்கட்டும்

நாட்டில் சமாதானத்தை நிலை நாட்டுவதற்கு அரசாங்கம் தொடர்ந்தும் பாடுபடும். தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் ஆரம்பித்த சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்ந்து நடைபெறும்.

பிரச்சினையில் ஈடுபட்டிருக்கும் இரு தரப்பினருக்கும் ஏற்புடையதான கண்ணியமான சமாதானத்தை ஏற்படுத்த அரசு உறுதியுடன் உழைக்கும்.

சிங்கள மக்களின் உரிமைகளைப் பாதுகாத்துப் பலப்படுத்தும் அதே வேளையில், சகல சமூகத்தினரதும் பெருந்தன்மை, சுயமரியாதை, சம அந்தஸ்து என்பன அங்கீகரிக்கப்படும் விதத்தில் சமாதானம் உருவாக்கப்படும். சமாதானம் அந்த வழியிலேயே அமைந்திருக்கும் என்பதனை நாம் நிச்சயித்துக் கொள்வோம்.

புதிய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தாம் பதவியேற்ற பின்னர் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையிலும், அதன் பின்னர் நடத்திய பத்திரிகையாளருக்கான முதலாவது செவ்வியிலும் மேற்சொன்ன தகவல்களையும், கருத்துக்களையும் வெளியிட்டிருக்கிறார்.

நாட்டில் வாழும் சகல இன மக்களும் சேர்ந்து தமக்கு நல்கிய அமோக ஆதரவு தமது சமாதான முயற்சியை அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள் என்பதனையே வெளிக்காட்டுவதாகவும் ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்திருக்கிறார். அது உண்மையே. அவர் கூறிய கருத்துக்களும் சரியானவையும், நேரத்துக்கு உகந்தவையுமாகும்.

சந்திரிகா இப்போது சகல அதிகாரங்களும் கொண்ட நிறைவேற்று ஜனாதிபதி. மேலும், ஜனாதிபதியும், அரசாங்கத்தினரும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள். அதனால் சந்திரிகா தாம் நினைப்பதை, திட்டமிடுவதைச் செயற்படுத்துவதில் தடைகள், தடங்கல்கள் இருக்க நியாயமில்லை.

இதற்கு மேலதிகமாக, இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணுமாறும், சமாதானத்தை உருவாக்குமாறும் மக்கள் ஆணை கொடுத்து விட்டார்கள். அதனால் சமாதான முயற்சிகளைத் துரிதப்படுத்த வேண்டியது அரசின் பொறுப்பும் கடமையுமாகும்.

எனவே சமாதான முயற்சிகளைத் தொடருவதில் சந்திரிகா அக்கறையாக இருப்பது ஒன்றும் பாராட்டுக்குரியது அல்ல; அது அவருக்குரிய கடமை. இங்கே தேவைப்படுவது துரிதமான செயற்பாடும் உண்மையான, விசுவாசமான, நீதியான நோக்கமுமே.

இந்த குணநலன்கள் சந்திரிகாவுக்கும், அவரது அரசினருக்கும் இருப்பதாக எடுத்துக்கொண்டாலும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதும் சமாதானத்தையும் அமைதியையும் அடைவதும் இலகுவான காரியங்கள் அல்ல. அதனை ஜனாதிபதியும் உணர்ந்துள்ளார்.

நாட்டு மக்களுக்கான உரை, பத்திரிகையாளருக்கான செவ்வி ஆகியவற்றில் சந்திரிகா தெரிவித்த கருத்துக்களில் சில ஒன்றுக்கு மற்றது முரணாக இருப்பதையும் அவதானிக்க முடிகிறது.

சமாதானத்தை அடைவதில் உறுதியாக இருப்பதாக சொல்லிய அவர், அதனைப் பெறுவதற்கு விலை கொடுக்க முடியாது என்று கூறியிருப்பது அவரது தெளிவின்மையைக் காட்டுகிறது. இடியப்பச் சிக்கலாக மாறி விட்ட இனப்பிரச்சினையைத் தீர்ப்பதென்றால் — அதன் மூலம் சமாதானத்தைக் காண விழைந்தால் — அரசாங்கம் சில விட்டுக்கொடுப்புகள் மூலம் விலைகொடுத்தே ஆக நேரிடும்!

எப்படியோ, சந்திரிகா தமது சமாதானப் பணியை உடனடியாக மீண்டும் தொடங்க வேண்டும். தாமதம் ஆகாது. போர் நிறுத்தம், போக்குவரத்துத் தடை நீக்கம், தமிழ்ப் பிரதேசங்களில் இராணுவ அடக்குமுறை, அரச பயங்கரவாதம் ஆகியவற்றை நீக்குதல் ஆகிய ஆரம்ப, அத்திவார நடவடிக்கைகளை மேற்கொண்டு, ஜனாதிபதி என்ற புதிய அதிகாரத்துடன் தமது பயணத்தை அவர் தொடங்கட்டும்!

# தமிழீழ மீட்பு நிதி மீளளிப்பு: தெரிவானோர் இலக்க விவரம்

யாழ்ப்பாணம், நவ. 14

தமிழீழ மீட்புநிதிக் கடனை மீளப்பெற தெரிவு செய்யப்பட்டோரின் கடன் பத்திர இலக்கங்கள் உதவி அரசாங்க அதிபர் பிரிவு ரீதியாக அறிவிக்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் உள்ள யாழ்ப்பாணம், நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் மீட்பு நிதி மீளளிப்புக்குத் தெரிவு செய்யப்பட்டோரின் கடன் பத்திர இலக்கங்கள் நேற்றைய உதயனில் வெளியாகின.

ஏனைய உதவி அரச அதிபர் பிரிவுகளில் மீட்பு நிதி மீளளிப்புக்குத் தெரிவு செய்யப்பட்ட கடன் பத்திர இலக்கங்கள் கீழே தரப்படுகின்றன :-

### கோப்பாய்

யா/கோ

| | | |
|---|---|---|
| 69 | 539 | 679 |
| 989 | 1492 | 2143 |
| 4839 | 6069 | 347 |
| 585 | 799 | 943 |
| 995 | 1320 | 5279 |
| 5784 | 324 | 734 |
| 778 | 2330 | 3243 |
| 4276 | 6193 | 6347 |
| 37 | 839 | 948 |
| 1069 | 1133 | 1318 |
| 2265 | 5351 | 142 |
| 258 | 505 | 581 |
| 615 | 1227 | 1253 |
| 2451 | 182 | 193 |
| 253 | 901 | 1231 |
| 2313 | 2823 | 5422 |
| 483 | 1124 | 1684 |
| 3531 | 3651 | 5499 |
| 6164 | 6202 | 07 |
| 30 | 327 | 475 |
| 1745 | 2240 | 4139 |
| 6109 | 281 | 1696 |
| 2721 | 3176 | 4561 |
| 5189 | 6158 | 6406 |
| 244 | 262 | 369 |
| 904 | 936 | 3925 |
| 4379 | 6458 | 28 |
| 124 | 257 | 278 |
| 405 | 931 | 3552 |
| 5341 | 55 | 145 |
| 197 | 312 | 514 |
| 557 | 3276 | 6019 |

### உடுவில்

யா/உ

| | | |
|---|---|---|
| 246 | 534 | 2025 |
| 2137 | 2710 | 321 |
| 421 | 766 | 2187 |
| 2576 | 53 | 313 |
| 603 | 1365 | 2783 |
| 623 | 652 | 787 |
| 916 | 1832 | 119 |
| 141 | 439 | 1102 |
| 1188 | 417 | 600 |
| 666 | 731 | 892 |
| 77 | 612 | 713 |
| 2398 | 16 | 31 |
| 266 | 822 | 102 |
| 572 | 671 | 1560 |
| 202 | 517 | 893 |
| 2891 | 921 | 2227 |
| 2954 | 3181 | 22 |
| 388 | 479 | 598 |

### மானிப்பாய்

யா/மா

| | | |
|---|---|---|
| 204 | 569 | 748 |
| 815 | 916 | 925 |
| 3183 | 179 | 222 |
| 228 | 2131 | 3219 |
| 3330 | 61 | 2242 |
| 2410 | 3075 | 3264 |
| 3684 | 23 | 833 |
| 882 | 1319 | 3833 |
| 3837 | 193 | 398 |
| 2137 | 3053 | 3120 |
| 3729 | 94 | 138 |
| 427 | 439 | 3641 |
| 3664 | 09 | 149 |
| 162 | 559 | 1118 |
| 1850 | 2415 | 75 |
| 674 | 775 | 832 |
| 2412 | 3207 | 3836 |
| 506 | 866 | 1922 |
| 2100 | 2156 | 2186 |
| 2963 | 613 | 682 |
| 810 | 862 | 879 |
| 939 | 2669 | 320 |
| 753 | 799 | 801 |
| 854 | 893 | 3792 |
| 19 | 137 | 437 |
| 718 | 2733 | 3247 |
| 3759 | | |

### தெல்லிப்பளை

யா/தெ

| | | |
|---|---|---|
| 31 | 98 | 419 |
| 430 | 1663 | 1948 |
| 3361 | 4134 | 480 |
| 531 | 725 | 2447 |
| 2910 | 3042 | 3956 |
| 4215 | 160 | 383 |
| 726 | 787 | 812 |
| 1142 | 1748 | 4216 |
| 474 | 937 | 2343 |
| 2672 | 3135 | 3175 |
| 3719 | 3745 | 113 |
| 597 | 730 | 892 |
| 1842 | 2813 | 3322 |
| 1378 | 07 | 62 |
| 311 | 414 | 617 |
| 739 | 1580 | 2856 |
| 33 | 87 | 90 |
| 93 | 242 | 684 |
| 742 | 3652 | 178 |
| 278 | 384 | 453 |

| | | |
|---|---|---|
| 771 | 836 | 843 |
| 2976 | 39 | 102 |
| 175 | 673 | 721 |
| 727 | 905 | 4330 |
| 08 | 268 | 517 |
| 720 | 976 | 2457 |
| 3548 | 4398 | 06 |
| 93 | 312 | 441 |
| 490 | 628 | 782 |
| 2794 | 201 | 1589 |
| 1695 | 2062 | 3259 |
| 3402 | 4146 | 4268 |

### சங்கானை

யா/ச

| | | |
|---|---|---|
| 381 | 795 | 1184 |
| 1223 | 1864 | 2058 |
| 3260 | 3802 | 449 |
| 1409 | 2461 | 3145 |
| 3181 | 3861 | 3893 |
| 4210 | 4570 | 50 |
| 204 | 224 | 869 |
| 883 | 959 | 1354 |
| 3064 | 4048 | 08 |
| 290 | 311 | 422 |
| 433 | 513 | 2812 |
| 3123 | 3213 | 174 |
| 253 | 462 | 480 |
| 938 | 1135 | 1195 |
| 1924 | 1942 | 427 |
| 710 | 914 | 960 |
| 1023 | 3362 | 3720 |
| 4188 | 4313 | 417 |
| 525 | 980 | 1801 |
| 2299 | 2348 | 2437 |
| 3973 | 4039 | 35 |
| 67 | 165 | 324 |
| 511 | 974 | 2027 |
| 3301 | 4037 | 133 |
| 389 | 519 | 592 |
| 668 | 958 | 1303 |
| 3783 | 4231 | 32 |
| 92 | 287 | 378 |
| 484 | 678 | 739 |
| 809 | 2427 | 42 |
| 91 | 209 | 745 |
| 1346 | 3045 | 3259 |
| 4168 | 4623 | 06 |
| 303 | 374 | 375 |
| 2435 | 3273 | 3698 |
| 4459 | 4574 | |

### காரைநகர்

யா/கா

| | | |
|---|---|---|
| 166 | 664 | 614 |
| 640 | 127 | 390 |
| 272 | 292 | 352 |
| 419 | 33 | 74 |
| 189 | 204 | 264 |
| 979 | 35 | 665 |
| 545 | 689 | 104 |
| 741 | 470 | 649 |

### வேலணை

யா/வே

| | | |
|---|---|---|
| 94 | 297 | 995 |
| 1318 | 2145 | 2519 |
| 69 | 91 | 182 |
| 763 | 800 | 874 |
| 48 | 591 | 622 |
| 802 | 1761 | 2865 |
| 584 | 916 | 1378 |
| 1513 | 2311 | 109 |
| 284 | 291 | 1386 |
| 1540 | 1869 | 283 |
| 423 | 517 | 574 |
| 1374 | 2601 | 52 |
| 76 | 537 | 576 |
| 764 | 63 | 93 |
| 206 | 589 | 833 |
| 308 | 360 | 499 |
| 809 | 2603 | 107 |
| 199 | 270 | 393 |
| 890 | 95 | 134 |
| 842 | 959 | 1576 |
| 410 | 539 | 557 |
| 1890 | 1920 | |

### கரவெட்டி

யா/க

| | | |
|---|---|---|
| 32 | 173 | 348 |
| 440 | 580 | 873 |
| 946 | 1364 | 3416 |
| 4629 | 190 | 307 |
| 429 | 715 | 910 |
| 2476 | 3127 | 3224 |
| 3339 | 4075 | 212 |
| 247 | 474 | 712 |
| 753 | 1814 | 2691 |
| 3210 | 3237 | 3342 |
| 145 | 172 | 305 |
| 538 | 553 | 624 |
| 2013 | 2791 | 3118 |
| 4305 | 31 | 63 |
| 123 | 341 | 2244 |
| 2748 | 2871 | 3544 |
| 3774 | 4216 | 30 |
| 221 | 930 | 2369 |
| 3142 | 3157 | 3217 |
| 3507 | 4033 | 4816 |
| 05 | 174 | 346 |
| 402 | 535 | 699 |
| 1946 | 2300 | 2419 |
| 4557 | 53 | 158 |
| 593 | 745 | 842 |
| 975 | 1013 | 1800 |
| 3679 | 4153 | 54 |
| 203 | 1753 | 1899 |
| 2184 | 2431 | 2816 |
| 3137 | 4361 | 5063 |
| 39 | 336 | 577 |
| 792 | 1152 | 2447 |
| 3102 | 4005 | 4698 |
| 5200 | 48 | 65 |
| 70 | 393 | 443 |
| 569 | 718 | 2208 |
| 3427 | [illegible] | [illegible] |
| 478 | [illegible] | [illegible] |

| | | |
|---|---|---|
| 1084 | 2892 | 2932 |
| 3659 | 4034 | 4782 |

### பருத்தித்துறை

யா/பரு

| | | |
|---|---|---|
| 06 | 49 | 293 |
| 540 | 882 | 1774 |
| 2735 | 3395 | 122 |
| 735 | 962 | 1105 |
| 1126 | 2108 | 2423 |
| 2523 | 46 | 290 |
| 695 | 847 | 1407 |
| 1743 | 2342 | 3918 |
| 515 | 534 | 721 |
| 759 | 1022 | 1325 |
| 2513 | 3402 | 121 |
| 221 | 554 | 616 |
| 2068 | 2120 | 3331 |
| 3508 | 63 | 129 |
| 174 | 378 | 569 |
| 789 | 3048 | 3480 |
| 86 | 793 | 828 |
| 1682 | 2200 | 2305 |
| 2343 | 2363 | 360 |
| 513 | 547 | 602 |
| 611 | 813 | 861 |
| 1709 | 161 | 215 |
| 315 | 332 | 621 |
| 2039 | 3086 | 3154 |
| 34 | 43 | 223 |
| 731 | 733 | 865 |
| 926 | 3166 | 13 |
| 60 | 99 | 179 |
| 352 | 598 | 959 |
| 991 | 77 | 338 |
| 421 | 549 | 1213 |
| 2318 | 2642 | 4271 |

### வடமராட்சி கிழக்கு

யா/வ.கி

| | | |
|---|---|---|
| 35 | 694 | 681 |
| 820 | 533 | 877 |
| 353 | 572 | 113 |
| 153 | 457 | 617 |
| 41 | 76 | 38 |
| 83 | 78 | 800 |
| 217 | 668 | 424 |
| 531 | 99 | 332 |

### சாவகச்சேரி

யா/சா

| | | |
|---|---|---|
| 183 | 526 | 681 |
| 720 | 1667 | 1760 |
| 3124 | 3560 | 3647 |
| 3978 | 5638 | 6226 |
| 6329 | 48 | 124 |
| 138 | 205 | 413 |
| 648 | 758 | 923 |
| 3565 | 4612 | 4698 |
| 4775 | 5138 | 361 |
| 386 | 678 | 798 |
| 954 | 1052 | 1247 |
| 1903 | 1985 | 3230 |
| 3356 | 5257 | 5686 |
| 214 | 225 | 233 |
| 497 | 818 | 926 |
| 1831 | 2387 | 2690 |
| 3160 | 3296 | 6286 |
| 6582 | 13 | 192 |
| 284 | 612 | 826 |
| 1235 | 1263 | 2296 |
| 2452 | 3926 | 4984 |
| 5448 | 5826 | 12 |
| 27 | 114 | 367 |
| 659 | 817 | 1004 |
| 1043 | 1131 | 2493 |
| 4360 | 4370 | 5244 |
| 317 | 445 | 464 |
| 842 | 959 | 1420 |
| 2840 | 3263 | 4309 |
| 4039 | 4380 | 4505 |
| 5440 | 206 | 262 |
| 266 | 372 | 553 |
| 595 | 840 | 864 |
| 1487 | 2425 | 3619 |
| 5355 | 6750 | 90 |
| 353 | 376 | 728 |
| 1496 | 1863 | 2175 |
| 2463 | 2563 | 3152 |
| 4638 | 5609 | 6614 |
| 397 | 510 | 726 |
| 735 | 739 | 801 |
| 831 | 3569 | 4687 |
| 5689 | 5850 | 6017 |
| 6243 | 19 | 294 |
| 366 | 477 | 807 |
| 1634 | 1695 | 2505 |
| 2573 | 2846 | 3045 |
| 5466 | 6448 | 164 |
| 282 | 427 | 2323 |
| 2375 | 2742 | 2924 |
| 3522 | 3630 | 3667 |
| 5526 | 5923 | 6370 |

### பச்சிலைப்பள்ளி

கி/ப

| | | |
|---|---|---|
| 53 | 149 | 136 |
| 96 | 482 | 23 |
| 518 | 681 | 26 |
| 175 | 42 | 539 |
| 38 | | |

### வெளியகல்வு

யா/வெ

| | | |
|---|---|---|
| 52 | 175 | 1094 |
| 141 | 216 | 639 |
| 233 | 384 | 1313 |
| 929 | 1130 | 1550 |
| 699 | 842 | 871 |
| 174 | 246 | 499 |
| 292 | 310 | 321 |
| 06 | 134 | 510 |
| 110 | 125 | 1050 |
| [illegible] | [illegible] | [illegible] |
| 09 | 16 | 411 |
| 86 | [illegible] | 904 |

## புலிகளின் குரல் வானொலியில்

14 — 11 — 1994

திங்கள் இரவு

★ 8-01 — தளிர்கள் சிறுவர்களுக்கான நிகழ்ச்சி
★ 8-20 — தாயகப் பாடல்கள்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — தரிசனம் — தமிழீழத்தின் மூத்த வயலின் இசைக்கலைஞர் திரு. சிவானந்தகுருக்கள் சர்வேஸ்வரசர்மா அவர்களுடனான செவ்வி
★ 9-00 — மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

15 — 11 — 1994

செவ்வாய் காலை

★ 7-02 — மாவீர வணக்கம்.
★ 7-15 — இன்றைய தாரகை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்.
★ 7-40 — தாயகப் பாடல்கள்
★ 8-00 — மணிக்கு காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

மட்டக்களப்பில்

## படையினர் வன்முறைக்கு 5, 182 பேர் பலியாகினர்

மட்டக்களப்பு, நவ 14

மட்டக்களப்புப் பகுதியில் சிறிலங்கா அரசபடையினரின் வன்முறைகளில் இதுவரை 5 ஆயிரத்து 182 பேர் கொல்லப்பட்டுள்ளனர். மட்டக்களப்பு செயலக புனர்வாழ்வுப் பகுதியில் கொல்லப்பட்ட மக்களின் விவரங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் இடம்பெற்று வரும் சிறிலங்கா படையினரின் வன்முறைகளிலேயே இவர்கள் கொல்லப்பட்டனர்.

இந்த எண்ணிக்கையை விட கூடுதலானோர் கொல்லப்பட்டனர் என்றும் அந்த விவரங்கள் தமக்கு முழுமையாக கிடைக்கவில்லை எனவும் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திரு பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

(எ-4)

## 400 கோடி ரூபா செலவில் வெள்ளத் தடுப்புத்திட்டம்

கொழும்பு, நவ. 14

பாரிய கொழும்பு வெள்ளத் தடுப்பு மற்றும் சுற்றாடல் அபிவிருத்தித் திட்டம் தற்போது அபிவிருத்தி செய்யப்படுகிறது.

கொழும்பையும் அதன் சுற்றுப் புறங்களையும் உள்ளடக்கும் அதன் 85 சதுர கிலோ மீற்றர் பகுதியில் இத்திட்டம் அமுல் செய்யப்படுவதாக அறிவிக்கப்படுகிறது.

இத்திட்டத்துக்கு 400 கோடி ரூபா செலவு செய்யப்படவுள்ளது. ஜப்பானிய அரசு 228 கோடி ரூபாவை இலகுகடனாக வழங்க ஒப்புக்கொண்டுள்ளது. காணி மீட்பு அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் இத்திட்டத்தை அமுல் செய்கிறது. (ஏ)

வெள்ளப்பெருக்கு காரணமாக

## திருமலை, மட்டுநகர், அம்பாறையில் 30 ஆயிரம் குடும்பங்கள் வீடுஇழப்பு!

கொழும்பு, நவ. 14

வெள்ளப் பெருக்கினால் கிழக்கு மாகாணத்தில் சுமார் 30ஆயிரம் குடும்பங்கள் வீடு, வாசல்களை இழந்துள்ளன என்று அறிவிக்கப்படுகிறது.

திருகோணமலை மாவட்டம் மூதூரில் 10ஆயிரம் குடும்பங்களும், மாவட்டத்தின் ஏனைய பகுதிகளில் ஆயிரத்து 750குடும்பங்களும் வெள்ளத்தினால் தங்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேறியிருப்பதாக சமூக சேவைப் பணிப்பாளர் திரு. என். டபிள்யு. இ. விஜேவந்த தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்தின் பல பகுதிகளிலும் வெள்ள அபாயம் எதிர் நோக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

லகுகலை, அட்டாளைச்சேனை, பொத்துவில் அக்கரைப்பற்று, காரைதீவு, கல்முனை, ஆலையடி வேம்பு, திருக்கோயில் மற்றும் தமன ஆகிய இடங்களில் 15ஆயிரத்து 500 குடும்பங்கள் வெள்ளப் பெருக்கு காரணமாக தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி வேறிடங்களில் தங்கியுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரும் எண்ணிக்கையிலான குடும்பங்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

வெள்ள அகதிகளுக்கு துரிதமாக நிவாரணம் வழங்க உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் வெள்ளப் பெருக்குக் காரணமாக வீடு, வாசல்களை இழந்தவர்களுக்கு சமைக்கப்பட்ட உணவுப் பொருள்களும் உலர் உணவுப் பொருள்களும் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக அம்பாறை மாவட்டத்துக்கு 10லட்சம் ரூபாவும் திருகோணமலை மாவட்டத்துக்கு 5லட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளதாக சமூக சேவைப் பணிப்பாளர் தெரிவித்தார்.

(எ)

## விஜேவீரா நினைவாக புலமைப்பரிசில் திட்டம்

கொழும்பு, நவ. 14

ஜே. வி. பி. இயக்கத்தின் ஸ்தாபகரான ரோஹண விஜேவீரா கொல்லப்பட்ட ஐந்தாவது ஆண்டு நினைவைக் குறிக்கு முகமாக புலமைப் பரிசுத்திட்டம் ஒன்றை தேசிய விடுதலை முன்னணி ஆரம்பித்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது

ரோஹண விஜேவீர ஞாபகார்த்த புலமைப் பரிசில் நிதியம் என்றழைக்கப்படும் இத் திட்டம் ஏழு குறிக்கோள்களைக்கொண்டு செயல்படும் என்றும் தரிவிக்கப்பட்டுள்ளது.

அரசியல் படுகொலைகளின் காரணமாக பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு உதவுதல் —

ரோஹண விஜேவீரா ஞாபகார்த்த நூல் நிலையம் ஒன்றை அமைத்தல் —

அரசியல் விஞ்ஞான நிலையம் ஒன்றை நிறுவுதல் ஆகியன இக் குறிக்கோள்களில் அடங்கியுள்ளன.

இந்த நிதியத்துக்கு நிதி உதவிசெய்ய விரும்புவர்களிடமிருந்து ஆதரவு கோரப்படுவதாக புலமைப் பரிசில் நிதியத்தின் செயலாளர் திரு. நிஹால் கலப்பதி தெரிவித்துள்ளார்.

திரு. கலப்பதி கடந்த ஜனாதிபதி தேர்தலில் ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணியின் வேட்பாளராக வேட்பு மனுத்தாக்கல் செய்தவர் என்பதும் — இறுதி நேரத்தில் போட்டியிலிருந்து விலகிக் கொண்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணம்

## திறந்தபல்கலைக்கழகத்தின் ஆங்கில கற்கை நெறி பதிவு

வலிகாமம் தெற்கு, நவ. 14

யாழ்ப்பாணம் திறந்த பல்கலைக்கழகத்தின் 1994 - 95 ஆம் ஆண்டு ஆங்கில கற்கை நெறிக்கான மாணவர்களை இம் மாதம் 19 ஆம் திகதி காலை ஒன்பது மணிக்கு கொக்குவில் தொழில் நுட்ப கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள திறந்த பல்கலைக்கழக பிரிவில் வந்து பதிவு செய்து கொள்ளுமாறு, அப் பல்கலைக்கழக பதிவாளர் திரு. ச. ஆ. ஞானேந்திரன் அறிவித்துள்ளார்.

போட்டிப் பரீட்சை மூலம் இக்கற்கை நெறிக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களே இப்பதிவினைச் செய்து கொள்ள வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ-152)

## 'பனைமரப் பொருளகம்' ஆரம்பிக்கப்பட்டது

யாழ்ப்பாணம், நவ. 14

கண்டபடி பனை தறிப்பதைக் கட்டுப்படுத்தும் நோக்கிலும், குறிக்கப்பட்ட பனை மரத்தின் பாகங்களை உரிய முறையில் முழுமையாகப் பயன்படுத்தும் வகையிலும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பனை தென்னை வள அபிவிருத்திப் பகுதியினர் ''பனைமரப் பொருளகம்'' என்னும் நிலையத்தை ஆரம்பித்துள்ளனர்.

அத்தியாவசிய தேவைகளுக்காக தறிக்கப்பட்ட பனை மரங்களை குறித்த தேவைகளுக்கு மட்டும் பயன்படுத்திவிட்டு, ஏனைய பாகங்கள் வீணடிக்கப்படுவது அவதானிக்கப்பட்டதன் பேரில் இந்நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

போர்க்காலச் சூழலில் தவிர்க்க முடியாத தேவைகளுக்கு மரங்களை இனங்கண்டு, திட்டமிட்ட முறையில் தறித்து பாவனைக்குரிய வகையில் பாகங்களாக்கி சகாய விலையில் வழங்கவும்—

தறிக்கப்பட்ட பனை மரத்தின் ஏனைய பாகங்கள் ஒவ்வொன்றும் உரிய முறையில் முழுமையாகப் பயன்படுத்து வதற்குமான நடவடிக்கைகள் இங்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

காலப்போக்கில் இது போன்ற நிலையங்கள் தமிழீழம் எங்கும் நிறுவப்படவுள்ளன.

இதேவேளையில், தறிக்கப்பட்ட பனை மரங்களுக்கு ஈடாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பனை தென்னை வள அபிவிருத்திப் பகுதியினர் கற்பகச்சோலை பனை நடுகைத் திட்டத்தின் மூலம் பாரிய பனை நடுகை முயற்சிசெய்து வருவது குறிப்பிடத்தக்கது.

## ஆங்கில தின விழா

அளவெட்டி, நவ. 14

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் நூற்றாண்டு விழா நிகழ்ச்சித் தொடரில் ஆங்கில தின விழா இன்று முற்பகல் 9 மணிக்கு கல்லூரியில் நடைபெறவுள்ளது.

(ஐ-13)

## அஷ்ரப்பின் முத்திரையுடன் ஐ. தே. க. பிரசுரங்கள்!

### பொலீஸார் விசாரணை

ஜனாதிபதித் தேர்தல் பிரசார காலத்தில் —

துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து, புனர்வாழ்வு அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ரப்பின் முத்திரை பொறிக்கப்பட்ட கடித உறைகளில் சிறிமா திஸாநாயக்காவுக்கு வாக்களிக்கக் கோரும் பிரசுரங்கள் அனுப்பப் பட்டனவாம்.

இத்தகைய பிரசுரங்கள் மாத்தளை மாவட்டத்தில் உள்ள சகல பள்ளிவாசல்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும் —

இதுகுறித்து சி.ஐ.டியினர் விசாரணை செய்து வருவதாகவும் —

கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. (ட)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி அன்னலட்சுமி தம்பித்துரை

திருமதி அன்னலட்சுமி தம்பித்துரை காலமானார்.

இவர் ஆனைக்கோட்டை ஆறுகால்மடம் புதுறோட்டை வசிப்பிடமாக கொண்ட காலஞ்சென்ற தம்பித்துரையின் அன்பு மனைவியும்' பத்மநாதன், கிருபாகரன், கிருதாகினி ஆகியோரின் தாயாரும், புஸ்பமாலாவின் மாமியாரும் பன்னீர்தாசன், பகிரதன், நிமலதாஸ், சயந்தன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 14-11-1994 இன்று பி. ப. 1.00 மணியளவில் கோம்பையன்மணல் மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த. பத்மநாதன் [மகன்]

புதுறோட்,
ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை.
[33765]

## வித்துவான் சி.நா. கணேசபண்டிதர் [B.O.L] (வைத்திய கலாநிதி)

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா நாகலிங்கம் கணேசன் அவர்கள் 12-11-94 இல் காலமானார்.

அன்னார் திருமதி கைலாயபதியின் அன்புக் கணவரும், நா. சண்முகநாதனின் (முன்னாள் பெருந்தெருக்கள் திணைக்கள, தொழில் நுட்ப உத்தியோகத்தர்) தமையனாரும், கருணாம்பாள், நாமநாதன் (முன்னாள் பெருந்தெருக்கள் திணைக்களம்), கருணாகரன் (இரசாயனவியல் உத்தியோகத்தர் ஓமான்), இராஜாம்பாள் (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தந்தையும் முத்துராஜா (ஓய்வுபெற்ற லிகிதர், கிளிநொச்சி), பாலச்சந்திரன் (அமெரிக்கா), திருமதி குமுதநாயகி (ஆசிரியை, யாழ் / ஸ்கந்தவரோதயா), திருமதி நந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும், திருமதி சோமசுந்தரம் (நாவலர் வீதி,) திரு. திருமதி கிருஷ்ணபிள்ளை (அமெரிக்கா), திரு. திருமதி சி. இராமநாதர் (ஓய்வுபெற்ற அதிபர் மிருசுவில்), தியாகராசா (ஓய்வுபெற்ற நீதிமன்ற முதலியார், ஆகியோரின் சம்பந்தியும், சோ. பரமானந்தம், காலஞ்சென்ற எஸ். நவரட்ணராஜா (பொறியியலாளர்), திரு. திருமதி கி. பாலசுப்பிரமணியம் (அமெரிக்கா), திரு. திருமதி கி. சிவானந்தன் (கனடா), சர்வானந்தன் (கனடா), டாக்டர் தேவகாந்தன் (அமெரிக்கா), திரு. திருமதி இ. மகேந்திரன் (அதிபர் கைதடி விக்னேஸ்வரா மகா வித்தியாலயம்), திரு. திருமதி பரலோகராஜா (அரசினர் வைத்தியசாலை சாவகச்சேரி), திரு. திருமதி இ. சுவேந்திரா (நில அளவை திணைக்களம், கொழும்பு), செல்வி. இ. வசந்தசெல்வி (யாழ்/போதனா வைத்தியசாலை), இ. சர்வேந்திரா (அபிவிருத்தி உத்தியோகத்தர், மருதங்கேணி), இ சத்தியேந்திரா (ஆசிரியர், உசன் இராமநாதன் மகா வித்தியாசாலை) ஆகியோரின் மாமனாரும், தர்ஷினி, அனுஷா, கிருசாந்தி. த. சிந்துஜா, ப. சோபிஜா, ப. பிரவீணா, கணனி ஆகியோரின் பாசமிகு பேரனாரும், திருமதி ச. சரோஜாவின் மைத்துனரும், திரு. திருமதி பொற்சபானந்தன் (பிரான்ஸ்), ச. ரவீந்திரன் (லண்டன்), செல்வி ச. சாந்தி ஆகியோரின் பெரிய தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் அளவெட்டி தெற்கு தம்மளையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக இன்று திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. நாமநாதன் (மகன்)

அளவெட்டி,
தெற்கு.
(33762)

## திருமதி ஐயாத்துரை பாக்கியம்

சண்டிலிப்பாயை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஐயாத்துரை பாக்கியம் 13-11-1994 அன்று காலமானார்

அன்னார் அமரர் ஐயாத்துரையின் அன்பு மனைவியும், அமரர் லட்சுமி அம்மா, அமரர் சின்னம்மா அமரர் கந்தையா, ஆச்சிமுத்து, அமரர் பொன்னுத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரியும், தெட்சணாமூர்த்தி (பிரான்ஸ்), அன்னலட்சுமி, அன்னம்மா, தருமகுலசிங்கம் (பிரான்ஸ்), குமாரகுலசிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு தாயாரும், கருணாநிதி (பிரான்ஸ்). அமரர் கந்தசாமி, பரமநாதன் இந்திராணி (பிரான்ஸ்), அரியமலர் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும்—

மதியழகன், பார்த்திபன் (பிரான்ஸ்), சௌந்தரராஜன் மோகனதாஸ் (பிரான்ஸ்), தனலட்சுமி, பார்வதி, சிவகுமார், கிருஷ்ணகுமார், தருமராஜா (சுவிஸ்), சத்தியதாஸ், ஜெயரஞ்சனி, ஜெயதாஸ் (பிரான்ஸ்), பாலரஞ்சனி, விமலதாஸ், பிரதீபரஞ்சனி, சிவரஞ்சனி, மதுரா, மயூரா, சாரங்கன் (பிரான்ஸ்), தேவராசா, தேவராசன், தனபாலசிங்கம், ஆகியோரின் அன்புப் பேத்தியும். பிரகாஷ், பார்த்திபன், டினோஜன், கஜோஜன் ஆகியோரின் அன்பு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14-11-94) திங்கட்கிழமை காலை 10-00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி கொட்டுப்பனைக்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பரமநாதன் (மருமகன்),
அன்னம்மா (மகள்).

சண்டிலிப்பாய் மத்தி,
சண்டிலிப்பாய்.
[33758]

## தம்பிராஜா புவனேஸ்வரன் (பபா)

உடுவிலைச் சேர்ந்த தம்பிராஜா புவனேஸ்வரன் (பபா) நேற்றுக் காலமானார்.

இவர் இலட்சுமிதேவியின் அன்புக் கணவரும். பிரதாபன் (ஆண்டு 12, யாழ் இந்துக்கல்லூரி), பிரதீபா, பிரகாசன் (உடுவில் மகளிர் கல்லூரி), ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார். ஈமக்கிரியைகள் 13-11-94 நேற்று உடுவிலில் நடைபெற்றன.

தகவல்:
பொ. மகேஸ்வரன் (மைத்துனர்)
(33763)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிற்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 14—11—1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

# வட - கிழக்குக்கு பிரிட்டனின் உதவி: ஆராய அந்நாட்டு அமைச்சர் வருகை

கொழும்பு, நவ. 14

பிரிட்டிஷ் வெளியுறவு பிரதி அமைச்சர் ரோனி போல்றி இன்று கொழும்புக்கு விஜயம் செய்கிறார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக தற்போது நடைபெறும் உத்தேச சமாதான நடவடிக்கைகளை வெற்றியுறச் செய்வதற்காக வடக்கு - கிழக்கு பிரதேசத்தின் புனரமைப்புப் பணிகளுக்கு எவ்வகையில் பிரிட்டன் உதவி அளிக்கவியலும் என்பது குறித்து புதிய அரசாங்கத்துடன் தாம் பேச்சு நடத்த விருப்பதாக பிரிட்டிஷ் பிரதி அமைச்சர் பி. பி. ஸிக்குத் தெரிவித்தார்.

இலங்கையில் மனிதஉரிமை பேணும் நடவடிக்கைகள் குறித்து பிரிட்டன் தீவிர கவனஞ்செலுத்தி வருவதாகவும் பிரதி அமைச்சர் குறிப்பிட்டார்.

புதிய அரசு மக்களுக்கு அளித்துள்ள வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு பிரிட்டன் எவ்வகையில் உதவமுடியும் என்பது குறித்தும் தாம் கொழும்பு அரசுடன் பேச விருப்பதாக அவர் தெரிவித்தார். (உ-எ-6

### ஜனாதிபதித்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்த இரு பிரதிநிதிகளும் அவதானிகள் குழுவில் இடம் பெற்றிருந்தனர்.

ஜனாதிபதி தேர்தலின் போது வாக்களிப்பு நிலையங்களில் எவ்வித பிரச்சினைகளும் இருந்ததாகத் தென்படவில்லை. சுதந்திரமான வாக்களிப்பிலிருந்து எவரும் பலவந்தமாகத் தடுக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இப்பொதுவான நிலைமைக்கு விதிவிலக்காக சில சம்பவங்கள் இடம்பெற்ற போதிலும் தேர்தலுக்கு அதனால் பாதிப்பு ஏற்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

சிவில் நிர்வாகம் சீர்குலைந்துள்ள பகுதிகளில் தேர்தலை நடத்துவதால் ஏற்படக்கூடிய விளைவுகள் பற்றியும் சர்வதேச அவதானிகள் தங்கள் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

அப்பகுதிகளில் மிகக்குறைந்தளவு வாக்குகளே செலுத்தப்படுவதால் உண்மையான பிரதிநிதித்துவத்தை பெற முடியாது. முறைகேடுகளுக்கும் இதனால் வழி ஏற்படுகிறது. வாக்களிக்க முடியாதவர்கள் மத்தியில் அதிருப்தி உண்டாகிறது.—என்றும் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (உ-எ)

### சோதிடம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை அரசியல்வாதிகளில் பெரும்பாலானோர் கிரகங்கள் என்ன சொல்கின்றன என்பதில் மிக கவனஞ்செலுத்துவார்கள்.

சோதிடர்களைக் கலந்தாலோசிக்காது முக்கிய பொதுச் சம்பவங்கள் எதுவும் நடைபெறுவதில்லை.

சோதிடர்களின் கணிப்பு முழுக்க முழுக்க சரியானது என்று சொல்லி விடவும் முடியாது— இவ்வாறு பி. பி. ஸி. மேலும் குறிப்பிட்டது.

### சிலாபம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று மாலை 6 மணிக்கு கொண்டுவரப்பட்ட ஊரடங்குச் சட்டம் இன்று காலை 4 மணி வரை அமுலில் இருக்கும் என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. (உ-3)

### இரவு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

திக நேரம், நாளொன்றுக்கு எட்டு மணித்தியாலங்களுக்கு மேல்) வேலை செய்யலாம்.

''தினவரவு ஏட்டில் தெளிவாக கடமைக்கு வந்து செல்லும் நேரம் குறிக்கப்படுதல் வேண்டும். மேலதிக வேலை நேரப்பட்டியல் தயாரிக்கப்பட்டு, மேலதிக நேர வேலைக்கான ஊதியம், அந்தந்த மாத சம்பளக் கொடுப்பனவுகளுடன், சம்பளப்பட்டியலில் காட்டப்பட்டு, வழங்கப்படல் வேண்டும்.

பொதுமக்களுக்கான அன்றாட பாவனைப் பொருள்கள் தடையின்றி, விரைவாக விநியோகிக்கப்படுவதற்கும். வர்த்தகர்களது, ஊழியர்களது நலன்கருதியும் மேற்கூறிய நடைமுறைகள் கைக்கொள்ளப்படவேண்டும்.

'இந்நடைமுறை 15-11-94 இல் இருந்து நடைமுறைப் படுத்தப்படல் வேண்டும்.

—இவ்வாறு செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

### பரிசுத்த...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை—

தமது இலங்கை விஜயம் சந்தேகத்துக்கு உரியதாக இருப்பதாக பரிசுத்த பாப்பரசர் தம்மை அண்மையில் சந்தித்த கண்டி ஆயரிடம் கூறியதாக மற்றொரு தகவல் தெரிவிக்கிறது.

தாம் தற்போது சுகவீனம் அடைந்திருப்பதாகவும், ஊன்று கோலுடன் நடக்க வேண்டிய அளவுக்குப் பலவீனமுற்றிருப்பதாகவும், உடல்நிலை தேறாத பட்சத்தில் தமது இலங்கை விஜயம் சந்தேகத்துக்குரியதாக உள்ளதாகவும்— பாப்பரசர் கண்டி ஆயரிடம் கூறியதாகத் தெரிய வருகிறது.

ஆனால் இலங்கை அரசு பரிசுத்த பாப்பரசரை கொழும்புக்கு அழைத்துவர உரிய ஏற்பாடுகளைச் செய்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (அ-3)

## வடபகுதியில் உலக வங்கி உதவியுடன் அபிவிருத்தித் திட்டங்கள்

### அறிக்கை ஆராயப்படுகிறது

யாழ்ப்பாணம், நவ. 14

உலகவங்கி நிதி உதவியுடன் வடக்கில் மேற்கொள்ளப்படவிருக்கும் திட்டங்கள் குறித்து விரிவாக ஆராயப் பட்டுவருகிறது.

அடுத்த வருடம் ஜூன் மாதத்தில் உலக வங்கி உதவித்திட்டத்தின் கீழ் வடக்கில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டங்கள் குறித்த அறிக்கை ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட அரச, அரசசார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகளின் ஆலோசனையை பெற்று தயாரிக்கப்பட்டுள்ள இந்த அறிக்கை குறித்து எதிர்வரும் 16 ஆம் திகதிமுதல் 3 நாட்கள் யாழ். பல்கலைக்கழகத்தில் நடக்கும் கலந்துரையாடலில் ஆராயப்படவிருக்கிறது.

இக் கலந்துரையாடலில் பல்துறைசார்ந்த நிபுணர்கள் பங்குபற்றவுள்ளனர்.

இம்முறை நடைமுறைப் படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டத்தின் கீழ் யாழ் மாவட்டத்தில் நவீன நகரங்களை அமைத்தல், வீதிகளை அகலமாக்கல், பொது வடிகால் முறையை ஏற்படுத்தல் உட்படபல புதிய அம்சங்கள் இடம் பெற்றுள்ளன.

21 ஆம் நூற்றாண்டுத் தேவைகளை நோக்கியதாக இத்திட்டங்கள் அமையவிருப்பதாக தெரிவிக்கப்பட்டது. (அ-3)

## தந்தைக்கு சந்திரிகா அஞ்சலி

கொழும்பு, நவ.14

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நேற்று ஹொரகொல்லவுக்கு சென்று தமது தந்தையாரும் மறைந்த பிரதமருமான திரு. எஸ். டபிள்யு. ஆர். டி பண்டாரநாயக்காவின் சமாதிக்கு அஞ்சலி செலுத்தினார் (உ-எ)

### யாழ்ப்பாண...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பணியாற்ற விரும்பும் டாக்டர்களுக்கு ஊக்குவிப்பு வழங்கும் திட்டம் ஒன்றை அமுல் நடத்துவதற்கு அமைச்சர் பௌஸி திட்டமிட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஊக்குவிப்புத் திட்டத்துடன் யாழ்ப்பாணத்திற்குச் சென்று பணிபுரிய விரும்பும் டாக்டர்களுக்கு கொழும்பில் இலவச காணி, டாக்டர்களின் பிள்ளைகளுக்கு கொழும்புப் பாடசாலைகளில் கல்வி பயிலும் வசதி ஆகியன செய்து கொடுக்கப்படும் என்றும் அமைச்சர் பௌஸி தெரிவித்தார்.

இது குறித்து ஜனாதிபதி சந்திரிகாவுடன் தாம் பேச விருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதனிடையில் —

யாழ். போதனா ஆஸ்பத்திரிப் பணிப்பாளர் டாக்டர் நவமலர் சனகரத்தினம் யாழ். ஆஸ்பத்திரியில் டாக்டர்களுக்கு நிலவும் பற்றாக்குறை பற்றி அரசுக்கு அறிவித்திருக்கிறார்.

தென் இலங்கையில் உள்ள தமிழ் டாக்டர்கள் கூட யாழ்ப்பாணம் சென்று பணிபுரிய மறுத்துவிட்டனர் என்று அரசு, பணிப்பாளர் டாக்டர் நவமலர் கனகரத்தினத்திற்கு பதிலளித்துள்ளதாக 'சண்டே லீடர்' பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.

பிரிட்டனில் பணிபுரியும் தமிழ் டாக்டர்களை திரும்பி வந்து யாழ்ப்பாணத்தில் பணிபுரியும்படி டாக்டர் நவமலர் கனகரத்தினம் கேட்டுக் கொண்டார் என்றும்—

அதற்கு அவர்கள் வர மறுத்துவிட்டனர் என்றும் 'சண்டே லீடர்' மேலும் தெரிவித்துள்ளது. [உ-எ]

### சிறிய மாற்றங்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சுபநேரம் இருப்பதாகவும் சோதிடர்கள் தெரிவித்ததை அடுத்து பதவியேற்பு வைபவம் இன்று காலை 6 மணிக்கு தள்ளிப்போடப்பட்டதாகவும் தெரியவந்தது.

ஜனாதிபதி சந்திரிகாவின் தாயாரான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா [வயது 78] தமது மகளின் முன்னிலையில் பிரதமராக சத்தியப்பிரமாணம் செய்து கொள்வார்.

இதுவரை தகவல் துறை பிரதியமைச்சராகப் பணியாற்றி வந்த அலவி மௌலானா இன்று அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக நியமிக்கப்படக்கூடும் என கொழும்பு பத்திரிகை ஒன்று ஹேஸ்யம் வெளியிட்டது.

பிரதி அமைச்சராகப் பணி புரிந்த ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேக்கும் அமைச்சர் பதவி வழங்கப் படக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அமைச்சரவை பதவியேற்ற பின்னர் பிரதி அமைச்சர்களின் நியமனம் குறித்து அறிவிக்கப்படும். [உ-ஐ-எ-3-6]

### அரசு-புலிகள்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றிலேயே அவர் இவ்வாறு சொன்னார்.

நான் பிரதமராக இருந்த போதும் விடுதலைப் புலிகளைப் பேச்சுக்கு வருமாறு அழைத்தோம். நான்கு அம்ச நிபந்தனைகளுடன் பேசுவதற்கு நாம் தயாராக இருந்தோம். அப்போது எதிர்க்கட்சித் தலைவரான திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்கும் அந்த நிபந்தனைகள் குறித்துத் தெரிவிக்கப் பட்டது.—

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு, விடுதலைப் புலிகளுடன் தாம் பேசுவது குறித்து நாடாளுமன்றக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தெரியப்படுத்தியது. எனினும் நாம் அந்தப் பேச்சுவார்த்தையுடன் எம்மைச் சம்பந்தப் படுத்த விரும்பவில்லை என்று தெரிவித்தோம்.—

நாங்கள் பேச்சுவார்த்தைக்குத் தடையாக இருக்கப்போவதில்லை என்றும் கூறினோம். அப்போது எதிர்க்கட்சித் தலைவராக திரு. காமினி திஸாநாயக்கா பணி புரிந்தார்.—

அதன் பின்னர் காமினியும் இன்னும் பல ஐ.தே.க தலைவர்களும் குண்டு வெடிப்பில் கொலையுண்டனர்.—

அந்தக் குண்டு வெடிப்பில் விடுதலைப் புலிகள் சம்பந்தப் பட்டிருப்பதாகச் சந்தேகிக்கப்படுவதாக பாதுகாப்புப் படையினர் தெரிவித்தனர்—

பொ. ஐ. மு. அரசு மீண்டும் புலிகளுடன் பேச முனைந்துள்ளது; அவர்கள் பேசட்டும். எமது நிலைப்பாடு முந்தியதே. பேச்சுக்கு நாம் தடையாக இருக்கப் போவதில்லை.— என்று செய்தியாளரின் கேள்விகளுக்கும் பதிலளித்த ரணில் தெரிவித்தார். (அ)

### மாவீரர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அமைக்கப்படும். வீதிகள் அலங்கரிக்கப்படும்.

மாவீரர்நாள் நிகழ்வுகளில் மக்கள் பங்கேற்பதை வலியுறுத்தும் கருத்துக்களை எடுத்துக்கூறும் கருத்தரங்குகளும், எழுச்சி வீதி நாடகங்களும் மாவீரர் எழுச்சி வாரத்தில் இடம்பெறும். (ஐ)

## தற்கொலைத் தாக்குதல் நடத்திய பெண்ணின் உடற்பகுதிகள் லண்டனில் பரிசோதனை!

கொழும்பு, நவ. 14

ஜனாதிபதி வேட்பாளர் காமினி திஸாநாயக்கா கொலையுண்டதற்குக் காரணமான குண்டை வெடிக்க வைத்த தற்கொலைத் தாக்குதல் நபர் எனச் சந்தேகிக்கப்படும் பெண்ணின் உடற்பகுதிகள் பிரிட்டனில் உள்ள மருத்துவ நிபுணர்களினால் தற்சமயம் பகுப்பாய்வு செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த உடற்பகுதிகளை லண்டனுக்கு எடுத்துச்சென்ற இலங்கை பொலீஸ் அதிகாரிகள், சம்பந்தப்பட்ட பெண்ணை அடையாளம்காண்பதற்காக, பரிசோதனைகளை விரைவில் நடத்துமாறு மருத்துவ நிபுணர்களைக் கேட்டுள்ளனர்.

குண்டை வெடிக்க வைக்க முன்னர் இப்பெண் சயனைட் உட்கொண்டாரா என்பதற்கு விரிவான ஆய்வுகளை மேற்கொள்ளுமாறும் அவர்கள் கேட்டுள்ளனர்.

உடலிலிருந்து துண்டிக்கப் தலையும், ஒரு கையின் சில துண்டுகளும் கால் ஒன்றுமே லண்டனுக்கு கொண்டு செல்லப்பட்ட உடற் பகுதிகளாகும். (உ-3)

யாழ் மிட்ரவுண் றோற்ரறக்ற் கழகத்தால் நடாத்த இருந்த

கராத்தே இறுதிப் போட்டிகள்

காலநிலையினை கணிப்பிட முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது என்பதை மனவருத்தத்துடன் அறியத்தருகின்றோம்.

ஏனைய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

(சி/9670)

# மரண அறிவித்தல்கள்

## த. கந்தையா (இளைப்பாறிய ஆசிரியர்)

இணுவில் கிழக்கை பிறப்பிடமாகவும், தாவடி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. தம்பையா கந்தையா (இளைப்பாறிய ஆசிரியர், இணுவில் மத்திய கல்லூரி) 1994 - 11 - 13 ஆம் திகதி காலமாகி விட்டார்

இவர் காலஞ்சென்ற திருமதி இரத்தினம் கந்தையாவின் அன்புக் கணவரும், சிவானந்தன் (அமெரிக்கா), ஸ்ரீதரன் (கனடா), யோகானந்தன் (கனடா), ஜெயானந்தன் (ஜேர்மனி), திருமதி இந்துமதி வேலாயுதபிள்ளை, திருமதி சுகன்யா யோகநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. த. வேலாயுதபிள்ளை (உப அதிபர், யா / சுதுமலை வடக்கு த. க. பாடசாலை), திரு. ம. யோகநாதன் (விவசாய விரிவாக்க உத்தியோகத்தர், கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். ஈமக்கிரியைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
த. வேலாயுதபிள்ளை. (மருமகன்)

தாவடி வடக்கு,
கொக்குவில்.
[33760]

## கந்தையா சாந்தலிங்கம்

வேலணை 5 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கந்தையா சாந்தலிங்கம் (காலி வர்த்தகர்) 13 - 11 - 94 இல் யாழ்ப்பாணத்தில் காலமானார்.

இவர் காலம்சென்ற கந்தையா சின்னத்தங்கச்சியின் அன்பு மகனும், கமலாம்பிகையின் அன்புக் கணவரும், சாந்தினி, நந்தினி (ஆசிரியை யா / புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம்), காலம்சென்ற கலைச்செல்வன், குமுதினி, செந்தூரன் ஆகியோரின் அன்புத்தந்தையும், சுந்தரலிங்கம், பஞ்சலிங்கம் ஆகியோரின் அன்பு மாமனாரும்; அறிவரசி, ஜனார்த்தனன், கவியரசு, சுவஸ்திக்கா ஆகியோரின் அன்புப் பேரனும், அன்னம்மா, சிவசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், பொன்னையா, நாகபூசணி, செல்லம்மா, இராசேஸ்வரி (அவுஸ்ரேலியா), பாக்கியலெட்சுமி, சபாபதி, மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 14-11-94 நண்பகல் 12 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் செம்மணி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
மகன், செந்தூரன்,
மருமக்கள்

குலு கண்டி லேன்,
கோப்பாய் தெற்கு,
கட்டைப்பிராய்,
(பருத்தித்துறை வீதி)
(33761)

## சிதம்பரப்பிள்ளை சண்முகராஜா [அப்பா]

நல்லூரைப் பிறப்பிடமாகவும், வேலணை கிழக்கு இரண்டாம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை சண்முகராஜா [அப்பா] 12. 11. 94 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை அமுதம்மாவின் அன்பு மகனும், நல்லதம்பி ராசம்மாவின் அன்பு மருமகனும், நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், சண்முகராகவன், பிருந்தா சண்முகப்பிரியா (கனடா), சண்முகராகவன், பிருந்தா ஆகியோரின் அன்புத் தந்தையும் நாகேஸ்வரி, ஜெகதீஸ்வரி, தர்மராஜா (கனடா), நித்தியானந்தராஜா, (கனடா), கணேசராஜா (பிரான்ஸ்), சற்குணேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் கமலேஸ்வரி, துரைராஜா, போசராஜா, ராஜேஸ்வரி (ஜேர்மன்), சுதாமதி (ஜேர்மன்), வரதராஜா (ஜேர்மன்), மனோகரன், சுந்தரலிங்கம், விஜயலக்சுமி, தனலக்சுமி, குமுதினி, சிறிகாந்தராஜா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிறப்பிடமான நல்லூரில் 13. 11. 94 அன்று பி. ப. 4 மணிக்கு நடைபெற்று, ஈமக்கிரியைகள் கோம்பயன்மணல் மயானத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

131/3, பருத்தித்துறை வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
[33764]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org